அவர்கள் சென்ற ஆண்டு எல்லோருக்கும் 5,000 ரூபாய் இலவசமாகக் கொடுத்தே, பலபேருக்குத் திருமணம் செய்து வைத்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே மழையே பெய்யாமல் இருக்கக்கூடாது, பெய்திருக்க வேண்டும்.

தொழிற்சாலைகள் வெளிப்படுத்தும் புகை.

*7213. திரு. ப. சுந்தரம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மறைமலை நகரில் சில தொழிற்சாலைகளில் இருந்து சுகாதாரக்கேடுகளை விளைவிக்கும் புகை வெளிப்படுவது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காற்றை மாசுபடுத்துகின்ற சில தொழிற்சாலைகள் மாசுக்கட்டுப்பாடு உபகரணங்களைப் பொருத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதைச் செயலாக்குவதின் முன்னேற்றம் கூர்ந்து கவனிக்கப்பட்டுவருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 2026, 3533, 5808, 6752 ஆகியவை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]